<u>கொடைக்கானல் நகராட்சி</u>

2019ம் ஆண்டு மார்ச் மாதம் 8ம் நாள் (08.03.2019) வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு கொடைக்கானல் நகராட்சி நகர்மன்றக் கூடத்தில் தனி அலுவலர் தலைமையில் நடைபெறும் அவசரக் கூட்டம்.

முன்னிலை: ரா.முருகேசன், எம்.ஏ., எம்.பில்., பி.எல்., டி.பி.எம்.,
தனி அலுவலர்.

1) கொடைக்கானல் நகராட்சி ஆணையாளர், திரு.ரா.முருகேசன் அவர்களின் பிப்ரவரி–2019ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண்.632/2018/சி1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **608, நாள்.08.03.2019.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **பதிவு செய்யப்படுகிறது.** |

*******

2) கொடைக்கானல் நகராட்சி சாதாரண உள்ளாட்சி தேர்தல் மறுவரையறை செய்யப்பட்ட புதிய வார்டு வாரியான உள்ளாட்சி தேர்தலுக்கான வரைவு வாக்கு சாவடி பட்டியல் தயார் செய்யப்பட்டு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இந்நகராட்சிக்கான உள்ளாட்சி தேர்தலுக்கு தயார் செய்யப்பட்டுள்ள வாக்கு சாவடி வரைவு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு. உள்ளாட்சி தேர்தலுக்கான வாக்குச் சாவடி வரைவு பட்டியலை மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். (கோப்பு ந.க.எண். 3411/2016/சி3)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **609, நாள்.08.03.2019.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **பதிவு செய்யப்படுகிறது.** |

*******

3) இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் துப்புரவு பணிக்கு குப்பைகள் அகற்றப் பயன்படுத்தப்பட்டு வரும் TN 57 W 9356 டம்பர் பிளேசர் வாகனத்தின் பின்புறமுள்ள குறுக்குச் சட்டம் உடைந்து குப்பைத் தொட்டிகளை தூக்க முடியாத அளவிற்கு ஏற்பட்டது. இந்நகரின் துப்புரவு பணியின் அவசர அவசியம் கருதி நகரில் சேகரமாகும் குப்பைகளை உடனுக்குடன் அப்புறப்படுத்தி நகரின் தூய்மையை பாதுகாக்கும் பொருட்டு வாகனத்தை பழுது நீக்கம் செய்ய வேண்டியதாயிற்று. மேற்கண்ட பழுதை சரி செய்யும் பொருட்டு, தேனி T.V.சுந்தரம் ஐயங்கார் & சன்ஸ் பிரைவேட் லிமிடெட் பணிமனையில் பழுதான வாகனத்திற்கான குறுக்குச் சட்டம் புதிதாக பொருத்தி வாகனத்தை இயக்கும் நிலையில் பழுது நீக்கம் செய்யப்பட்டது. மேற்கண்ட விபரத்திற்கு நல்ல முறையில் குப்பைகளை அகற்ற இயங்கச் செய்து அதற்கான செலவினப் பட்டியல் ரூ.9,024/– (ரூபாய் ஒன்பதாயிரத்து இருபத்தி நான்கு மட்டும்) TVS நிறுவனத்திலிருந்து வரப்பெற்றுள்ளது. இத்தொகையினை TVS நிறுவனத்திற்கு நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. பொது சுகாதார நலன் கருதி வாகன பழுது நீக்கச் செலவினத்திற்கு மன்றம் அனுமதிக்கலாம். (கோப்பு ந.க.எண். 1043/2019/எச்.1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **610, நாள்.08.03.2019.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

4) கொடைக்கானல் நகராட்சி எல்லைக்குற்பட்ட 24 வார்டுகளிலும் உள்ள LED தெருவிளக்குகளை 2018–2019ம் ஆண்டு முதல் இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிகள் செய்திட நகர்மன்றத் தீர்மானம் எண்.262, நாள்.30.11.2017ல் மன்ற ஒப்புதல் பெறப்பட்டு நகராட்சி நிர்வாக தலைமைப் பொறியாளர், சென்னை அவர்களின் கடிதம் எண்.13899/2016/டி.ஒ.1, நாள்.09.03.2018ல் 1.4.2018 முதல் ஓர் ஆண்டிற்கு மேற்படி தெரு விளக்குகளை பராமரித்திட

அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன்படி 28.3.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் மாருதி டிரேடிங் கார்ப்பரேசன், தேனி நிறுவனத்தின் ஒப்பந்தப் புள்ளியினை நகர்மன்றத் தீர்மானம் 356, நாள்.19.4.2018ல் ஒப்புதல் செய்யப்பட்டு 3.4.2018 முதல் ஒரு வருட காலம் அல்லது ESCO நிறுவனத்திற்கு ஒப்படைக்கும் காலம் வரை LED தெருவிளக்கு பராமரிப்பு பணி மேற்கொள்ள மாருதி டிரேடிங் கார்ப்பரேசன், தேனி நிறுவனத்திற்கு 19.04.2018 அன்று பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. தற்போது 2019 பாராளுமன்ற தேர்தல் மிக விரைவில் அறிவிக்கப்பட உள்ளதாலும், தெருவிளக்கு பணி அத்தியாவசிய பணியாக உள்ளதாலும், இப்பணியை இதே ஒப்பந்ததாரர் மூலம் நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலக தலைமைப் பொறியாளரால் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி விகிதத்தில் 02.04.2019 முதல் 02.07.2019 வரை மூன்று மாத காலத்திற்கு கால நீட்டிப்பு செய்துகொள்ள தலைமை பொறியாளரின் பின்னேற்பு பெறவும், இதே ஒப்பந்ததாரர் மூலம் மேலும் ஓராண்டு காலத்திற்கு அல்லது ESCO நிறுவனத்திற்கு ஒப்படைக்கும் காலம் வரை இதில் எது முன்னதோ அதுவரை LED தெருவிளக்குகளை இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணி மேற்கொள்ள கால நீட்டிப்பு செய்து கொள்ள தலைமை பொறியாளரின் அனுமதி பெறவும் அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – அனுமதிக்கலாம். (கோப்பு ந.க.எண்.3416/2016/இ1)

| நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் : | 611, நாள்.08.03.2019. |
|---|---|
| | |
| நகர் மன்ற தீர்மானம் : | அனுமதிக்கப்படுகிறது. |

*******

5) கொடைக்கானல் நகராட்சிக்கு 2019–20ம் ஆண்டிற்கு எழுது பொருட்கள் கொள்முதல் செய்து அலுவலக இருப்பில் வைக்கப்பட வேண்டியுள்ளது. எழுது பொருட்களின் தேவை பட்டியலில் காணும் விபரத்திற்கு உரிய எழுது பொருட்களை அரசாணை நிலை எண்.330, தொழில்துறை நாள்.03.05.1991ன்படி விலைப்புள்ளி மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோராமல் நேரடியாக மாவட்ட அச்சக சேவைத் தொழிற் கூட்டுறவு சங்கம் லிட் நிறுவனங்களில் கொள்முதல் செய்து கொள்ள அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

மேலும், சென்னை நகராட்சி நிர்வாக இணை ஆணையர் (நிர்வாகம்) அவர்களின் கடிதம் C.No.29968 / 2012 / OP3, நாள்.30.12.2013ன்படி நகராட்சிக்குத் தேவையான அனைத்து விதமான பொருட்களையும் அரசு கூட்டுறவு நிறுவனங்களில் கொள்முதல் செய்து கொள்ள பரிந்துரை செய்துள்ளார்கள்.

மேற்காணும் அனுமதிக்கிணங்க 2019–20ம் ஆண்டிற்கு தேவையான எழுது பொருட்களை கோயம்புத்தூர், மாவட்ட அச்சக சேவை தொழிற் கூட்டுறவு சங்கம் லிட் நிறுவனத்திலிருந்து கொள்முதல் செய்து கொள்வதற்கும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.20,00,000/–ஐ (ரூபாய் இருபது இலட்சம் மட்டும்) இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: 1) அரசாணை நிலை எண்.330, தொழில்துறை, நாள்.03.05.1991ன்படி விலைப்புள்ளி மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோராமல் அரசு கூட்டுறவு நிறுவனமான கோயம்புத்தூர் மாவட்ட அச்சக சேவை தொழிற் கூட்டுறவு சங்கம் லிட் நிறுவனத்திடமிருந்து இந்நகராட்சிக்கு 2019–20ம் ஆண்டிற்கு தேவையான எழுது பொருட்களை கொள்முதல் செய்வதற்கும் அதற்கான உத்தேச செலவினம் ரூபாய் இருபது இலட்சத்தினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.1998/2018/பி3).
2) 2019–20ம் ஆண்டிற்கு எழுது பொருட்களின் தேவையினை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று அரசு கூட்டுறவு நிறுவனத்திற்கு விநியோக உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

| நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் : | 612, நாள்.08.03.2019. |
|---|---|
| | |
| நகர் மன்ற தீர்மானம் : | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்படுகிறது. |

ஒம்/–ரா.முருகேசன்,
தனி அலுவலர்,
கொடைக்கானல் நகராட்சி.

/உண்மை நகல்/
ஆணையாளர்,
கொடைக்கானல் நகராட்சி.